O.S. No.52/2024

09.09.2025

**வா.சா.1**

**திருமதி ரேவதி**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை (2 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில்)**

1ம் பிரதிவாதி என்னுடைய 2 வது மகன். சார் பதிவாளர் அலுவலகத்தில் தஸ்தாவேஜுகளில் நான்தான் கையெழுத்து போட்டேன். சார் பதிவாளர் அலுவலகம் அரசு அலுவலகம் என்றால் நான் படிப்பறிவு இல்லாததால் என்னை ஏமாற்றி என்னிடம் என் மகன் கையெழுத்து வாங்கி விட்டான். அவ்வாறு சொல்வது பொய் என்றால் தவறு. பிரதிவாதி அலுவலகமானது உரிய சட்ட விதிகளுக்குட்பட்டு பதிவு சட்டப்படி ஆவணங்கள் பார்வையிட்டு முறையாக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்துக்களை பொறுத்து சமூகம் நீதிமன்றம் இறுதியாக பிறப்பிக்கும் தீர்ப்பிற்கு ஏற்ப நடக்க 2 முதல் 5 பிரதிவாதிகள் தயாராக உள்ளார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மனு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் தவறு.

**குறுக்கு விசாரணை (1ம் பிரதிவாதி தரப்பில்)**

நான் பிறந்த ஊர் கூத்தனூர் பக்கத்தில் உள்ள சதளபதி. குருமூர்த்தி என்பவர் என் உடன் பிறந்த அண்ணன். ரெட்டகுடி என்ற கிராமத்தில் என் அண்ணன் கூலி அறவை மில் வைத்துள்ளார். அவரது மகன்தான் முத்துக்குமரன். என் இளைய சகோதரி நளாயினி, அவரது கணவர் மூர்த்தி, அவர்கள் சீர்காழியில் வசித்து வருகிறார்கள். நளாயினி-மூர்த்திக்கு குழந்தை கிடையாது. எனக்கு 2 மகன்கள்தான். என்னுடைய முதல் மகன் பெயர் கணேஷ்குமார், 2 வது மகன் பெயர் செந்தில்குமார். சதளபதி கிராமத்தில் எனக்கு பூர்வீக சொத்துக்கள் எதுவும் கிடையாது. என் உடன் பிறந்தவர்கள் எல்லோரும் சொந்த உடல் உழைப்பில்தான் வாழ்ந்து வருகிறார்கள். எனது கணவர் அய்யம்பெருமாள் திருமணத்திற்கு பிறகுதான் எனக்கு உறவினர். அய்யம்பெருமாளின் உடன் பிறந்த சகோதரர் பன்னீர்செல்வம். அவரது மகன் பெயர் ரமேஷ். நன்னிலம் தாலுகா, கூத்தனூர் கிராமம், ஆற்றங்கரை தெருவில் வசித்துவரும் கண்ணையன் குமாரர் ராமன் என்பவர் என் உறவினர். என் வீட்டிற்கு பக்கத்தில் ராஜீவ்காந்தி என்பவரும் எதிர்புறம் சக்திவேல் என்பவரும் வசித்து வருகிறார்கள். முருகன் என்பவர் என் வீட்டிற்கு பக்கத்தில் வசித்து வருகிறார். என் மகன் செந்தில்குமாருடன் சிறுவயது முதலே படித்த நண்பர்கள்

மணிகண்டன், பாரி ஆகியோரை எனக்கு தெரியாது. எனக்கு சுத்தமாக படிப்பறிவு கிடையாது. கையெழுத்து போட மட்டும் பின்னர் கற்றுக் கொண்டேன். நான் பள்ளிக்கு சென்று 8ம் வகுப்புவரை படித்துள்ளேன் என்றால் தவறு. நான் வீட்டு வேலைதான் பார்த்து வருகிறேன். என் கணவரின் பூர்வீக சொத்து என்பது தாவா வழக்கில் உள்ள மனைக்கட்டுதான். என் கணவர் எனது சகோதரர் குருமூர்த்தியின் கூலி அறவை மில்லில் வேலை செய்தார். வா.சா.ஆ.1ன் மூலம் என் கணவர் எனக்கு எழுதிவைத்த சொத்துதான். வா.சா.ஆ.1 சொத்துதான் ஆதியில் எங்கள் கூரை வீடு இருந்து வந்தது. அதை இடித்துவிட்டுதான் புதிய வீடு கட்டப்பட்டது. புதிய வீடு கட்டுவதற்கு இடம் போதாதால் சக்திவேல் என்பவரிடமிருந்து வா.சா.ஆ.2 கிரயம் பெறப்பட்டது. வா.சா.ஆ.2யை கிரயம் பெறுவதற்கு ரூ.40,000/- சக்திவேலிடம் கொடுக்கப்பட்டது. வா.சா.ஆ.2 பதிவு செய்வதற்கான ஏற்பாடுகளை யார் செய்தார்கள் என்று எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 என் கணவர் நான் வங்கியில் கடன் பெறுவதற்காக என் பெயரில் எழுதப்பட்டது. வா.சா.ஆ.1, வா.சா.ஆ.2 ஆகியவற்றிற்கான பத்திர பதிவு செலவினங்கள் யாவற்றிற்கும் எனது மூத்த மகன் கணேஷ்குமார், என் 2வது மகன் செந்தில்குமாருக்கு பணம் அனுப்பி அதை அவர் செய்து கொடுத்தார். எனது மூத்த மகன் கணேஷ்குமாரை

என் சகோதரி நளாயினி அவருக்கு குழந்தை இல்லையென்ற காரணத்தினால் சிறுவயது முதலே எடுத்து வளர்த்தார். கணேஷ்குமார் சீர்காழியில் பள்ளிப் படிப்பு படித்து முடித்தது அனைத்தும் அவருடன் சீர்காழியில் வசித்து வந்தபோதுதான். எங்களுடன் வசித்தது இளையமகன் செந்தில்குமார் மட்டும்தான். இந்த வழக்கிற்கு முன்புவரை எங்கள் குடும்பத்தினர் அனைவரும் ஒற்றுமையாகத்தான் இருந்து வந்தோம். எனது மூத்த மகன் கணேஷ்குமார் 2016 ல்தான் முதன் முதலாக வேலைக்கு சென்றான். இளைய மகன் செந்தில்குமார் B.E. பட்டப் படிப்பு படித்துள்ளான். செந்தில்குமார் படித்து முடித்த உடனேயே வேலைக்கு சென்று விட்டான். எனது மூத்தமகன் கணேஷ்குமார் பணி நிமித்தமாக எந்த வருடம் வெளிநாடு சென்றான் என்று எனக்கு தெரியாது. எனது மூத்த மகன் ஏஜெண்ட் மூலமாக வெளிநாடு செல்வதற்கு ரூ.5,00,000/- செலவாகியிருக்குமா என்றால் எனக்கு தெரியாது. இளையமகன் செந்தில்குமார் 2011 ம் ஆண்டு வேலைக்கு சென்று விட்டான் என்றால் இருக்கலாம். தற்போது சாட்சி எவ்வளவு வருடமாக இளைய மகன் வேலை செய்தான் என்று எனக்கு ஞாபகமில்லை என கூறுகிறார். எனது மூத்த மகன் கணேஷ்குமாருக்கு 15.02.2019 ல் திருமணம் நடைபெற்றது என்றால் சரி. அவரது மனைவி பெயர் விஜி. அவரது மாமனார் பெயர் வீரமுத்து. அவர்கள் என் வீட்டிலிருந்து 3

வீடுகள் தள்ளி வசித்து வருகிறார்கள். என் மூத்த மகன் வேலைக்கு செல்லும் வரையில் என் சகோதரி நளாயினி குடும்பத்தில் வசித்து வந்தார். பின்னர் என்னுடன் வந்து விட்டார். எனது மூத்த மகன் அவரது நண்பரிடம் அவன் பொறுப்பில் கடனாக தொகை பெற்றுக் கொண்டுதான் வெளிநாடு சென்றான். என் இளையமகன் செந்தில்குமார் அவனுக்கு எவ்வித உதவியும் செய்யவில்லை. என் மூத்த மகன் வெளிநாடு செல்வதற்கு எவ்வளவு தொகை யாரிடம் வாங்கினான் எனவும் அதை எவ்வாறு திரும்ப கொடுத்தான் என்ற விபரமும் எனக்கு தெரியாது. எனது மூத்த மகன் வெளிநாட்டிலிருந்து என் இளைய மகனின் வங்கி கணக்கிற்கு தொகைகளை அனுப்பி அதை கொண்டு அவர் பெற்ற கடன்களை தீர்க்க சொல்லியிருந்தான். இளையமகன் அந்த கடன்களை தீர்த்து விட்டான். என் இளைய மகன் செந்தில்குமாருக்கு 17.05.2021 ல் திருமணம் நடைபெற்றது என்றால் சரி. செந்தில்குமாரின் மனைவி ஸ்ரீமதி எங்களது புது சொந்தமாகும். அவர் முடிகொண்டான் ஆலங்குடி கிராமத்தை சேர்ந்தவர். செந்தில்குமார்-ஸ்ரீமதிக்கு வேதஸ்ரீ என்ற மைனர் பெண் குழந்தை ஒன்று உள்ளது. திருமணம் நடைபெற்ற பிறகு என் இளையமகன் செந்தில்குமார் வீட்டின் கீழபுறமும் மூத்த மகன் கணேஷ்குமார் வீட்டின் மேல் புறமும் குடும்பத்துடன் வசித்து வந்தார்கள். இளைய மகன் செந்தில்குமார் பணி

மாறுதலில் சுமார் 4 வருடங்களுக்கு முன்பு திருச்சி சென்று விட்டான். என் இளைய மகனின் Enfield Motor Cycle PY 02 S 6386 என்ற இருவாகனமும் TN 50 AJ 3640 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனமும் வழக்கு சொத்தில்தான் உள்ளது. எனக்கும் என் இளைய மருமகளுக்குமிடையே எந்த அபிப்பிராய பேதமும் கிடையாது. என் மூத்த மகனின் மாமனார் வீரமுத்து அந்த ஊரில் செல்வாக்கு படைத்த நபர் என்றால் சரிதான். வழக்கு சொத்தில் புதிய வீடு கட்டவேண்டும் என முடிவெடுத்தது என் மூத்த மகன் கணேஷ்குமார்தான். அதற்காகதான் பேரளம் பாரத மாநில வங்கி கிளையில் கடன் வசதி பெறப்பட்டது. வீடு கட்டுவதற்காகவும் கடன் பெறுவதற்காகவும்தான் வா.சா.ஆ.1, வா.சா.ஆ.2 எனது பெயரில் ஏற்பட்டது என்றால் சரி. வா.சா.ஆ.1, வா.சா.ஆ.2 சமயத்தில் என் மூத்த மகன் கணேஷ்குமார் வெளிநாட்டில்தான் இருந்தான். வங்கியில் கடன் பெறும்போதும் என் மூத்த மகன் வெளிநாட்டில்தான் இருந்தான். அந்த சமயத்தில் என் இளைய மகன் செந்தில்குமார் என்னுடன்தான் வசித்து வந்தான். பேரளம் வங்கியில் வீடு கட்டுவதற்காக கடன் வாங்குவதற்கான ஏற்பாடுகளை இளைய மகன் செந்தில்குமார் செய்தான். வங்கியில் எனக்கு வயதாகி விட்ட காரணத்தினாலும் எனக்கு தனிப்பட்ட வருமானம் இல்லையென்ற காரணத்தினாலும் எனக்கு கடன் வழங்க முடியாது என்ற

காரணத்தினால் என் இளைய மகன் அவனது பெயரில் கடன் வாங்கினான். என்னிடம் காண்பிக்கப்படும் வங்கி கணக்கு புத்தகம் என் பெயரிலும் என்னுடைய இளைய மகன் பெயரிலும் கூட்டாக ஏற்படுத்தப்பட்டது. அது **பி.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வா.சா.ஆ.3 ல் வங்கியில் எனது பெயரிலும் என் இளைய மகன் பெயரிலும் கூட்டாக ரூ.13,00,000/- கடன் வழுங்கப்பட்டு அது திரும்ப செலுத்தப்பட்டதாக உள்ளது என்றால் சரி. வங்கி கடனுக்காக 28.06.2017 ல் ஏற்படுத்தப்பட்ட ஆவணம்தான் வா.சா.ஆ.4. நான் வங்கியில் அடமான கடன் பெற்ற விபரத்தையும் அடமான கடன் பத்திரம் எழுதி கொடுத்த விபரத்தையும் என் மூத்த மகன் கணேஷ்குமாரிடம் தெரிவித்தேன். கடன் தொகையை மாதா மாதம் செலுத்த வேண்டும் என்பது எனக்கு தெரியும். ஆனால், எவ்வளவு தொகை செலுத்த வேண்டும் என்று எனக்கு தெரியாது. வங்கியில் கடன் பெற்று வீடு கட்டி முடிக்க 3 வருடங்கள் ஆகிவிட்டது. என் இளைய மகன்தான் முழுமையாக நின்று கட்டிடத்தை கட்டி முடித்தான். என் மூத்த மகன் கடனை திரும்ப செலுத்துவதற்கு எனக்கு நேரடியாக வங்கி மூலம் எந்தவொரு தொகையும் அனுப்பவில்லை. எனக்கு பி.சா.ஆ.1 வங்கி கணக்கை தவிர வேறு வங்கி கணக்கு கிடையாது. என் இளைய மகனுக்கு என் மூத்த மகன் எவ்வளவு தொகை அனுப்பினான் என்ற விபரம் தெரியாது. மூத்த மகனிடம் உரிய

கணக்குகள் உள்ளன. 2016 ல் வெளிநாடு சென்ற என் மூத்த மகன் 3 வருடங்கள் கழித்து இந்தியாவிற்கு வந்தான். அவன் இந்தியா வந்தபோதுதான் திருமணம் நிச்சயிக்கப்பட்டு அவனுக்கு திருமணம் நடைபெற்றது. அப்போது வீடு கிரஹப்பிரவேசம் செய்து முடிக்கப்பட்டு விட்டது. வங்கி கடனை 07.12.2023 ல் என் இளைய மகன்தான் தீர்த்து வைத்தான் என்றால் என் மூத்த மகன்தான் அந்த பணத்தை அனுப்பி தீர்த்து வைத்தான். என் இளைய மகன் வீடு கட்டும் கடனை அடைத்த பிறகு மறுபடியும் வங்கியில் கடன் பெற வேண்டும் என்றும் அதற்காக என்னை அழைத்து சென்று வா.சா.ஆ.5 யை எழுதி வாங்கி கொண்டான். வங்கி கடனை தீர்த்ததும் மறுபடியும் மீண்டும் கடன் பெற்றதும் 07.12.2023 அன்றுதான். வா.சா.ஆ.1, வா.சா.ஆ.2 ல் குறிப்பிட்டுள்ள காலி மனையின் மதிப்பு அப்போதைய காலகட்டத்தில் மிகவும் குறைவு. தாவா சொத்தின் கட்டுமான மதிப்பு சுமார் 35,00,000/- அப்போது இருக்கும். வா.சா.ஆ.5 பதிவு செய்யும் சமயத்தில் நான் மட்டும்தான் சென்றேன். என் கணவரோ, என் மூத்த மருமகளோ, அவரது தகப்பனாரோ வரவில்லை. பதிவாளர் அலுவலகத்திற்கு சென்று வந்த விபரத்தை நான் என் மூத்த மகனிடமோ மற்றவர்களிடமோ தெரிவித்தேனா என்றால் தெரிவிக்கவில்லை, காரணம் என் இளைய மகன் அதை சொல்ல வேண்டாம் என என்னிடம் சொன்னான். 2 மாதங்களுக்கு பிறகு

கிராம நிர்வாக அலுவலர் மூலம் வா.சா.ஆ.5 ஏற்படுத்திய விபரத்தை தெரிந்து கொண்டோம். பட்டா செந்தில்குமார் பெயரில் மாறி விட்டதாக VAO சொன்னார், அதன்பிறகுதான் நாங்கள் தெரிந்து கொண்டோம். என் மூத்த மகன், அவரது மனைவி விஜி, அவரது தகப்பனார் வீரமுத்து ஆகியோரின் தனித்த ஆலோசனையின் பெயரில் என் இளைய மகன் என்னை ஏமாற்றி வா.சா.ஆ.5 யை எழுதி பெற்றுக்கொண்டு விட்டதாக காவல் துறையில் நான் புகார் கொடுத்தேன். காவல் துறையினர் நீதிமன்றம் மூலமாக பரிகாரம் கேட்க சொல்லி என்னிடம் சொல்லிவிட்டார்கள். புகார் சம்மந்தமான ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. வழக்கறிஞர் அறிவிப்பு நான் அனுப்பவில்லை. வழக்கு சொத்தான புதிய வீட்டில் 405, 107 என்ற 2 மின் இணைப்புகள் உள்ளன என்றால் சரி. மின் இணைப்புகள் யார் பெயரில் உள்ளது என்று எனக்கு தெரியாது. என் மூத்த மகன்தான் மின்கட்டணம் செலுத்தி வருகிறான். பட்டாவை மீண்டும் என் பெயரில் மாற்றி கொடுக்க வேண்டுமென்று மாவட்ட ஆட்சியரிடம் நாங்கள்தான் மனு கொடுத்தோம். அந்த மனு வழக்கு போட்டபிறகுதான் தாக்கல் செய்யப்பட்டது. பட்டா மாறுதல் விசாரணைக்கு பிரதிவாதி வராத காரணத்தால் எனக்கு ஆதரவாக உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அதற்கான பட்டா மாறுதல் உத்தரவு என் பெரிய மகனிடம் உள்ளது.

செந்தில்குமாரின் திருமணத்தின்போது கொடுக்கப்பட்ட LG TV தற்போது கீழ் வீட்டில்தான் உள்ளது என்றால் சரி. அது பொதுவான குடும்பமாக இருந்தபோது வாங்கியது. TV பார்ப்பதற்கான மாதாந்திர வாடகை தொகையை நான் செலுத்தவில்லை, என் மூத்த மகன்தான் செலுத்தி வருகிறான். 2 வது மகனின் திருமணத்திற்கு அவரது மனைவிக்கு அவர் பிறந்த வீட்டில் எவ்வளவு நகை செய்தார்கள் என்று எனக்கு தெரியாது. சீர்வரிசை சாமான்கள் கீழ் வீட்டில் இருந்ததில் 75% சாமான்களை செந்தில்குமார் எடுத்து சென்று விட்டான். அவருக்கு சொந்தமாக 2 பீரோக்கள் உள்ளது, அதற்குண்டான சாவிகளும் அவர்கள் வசம்தான் உள்ளது. அதில் என்ன இருக்கிறது என்று எனக்கு தெரியாது. சக்திவேலிடமிருந்து வாங்கப்பட்ட இடத்திற்கான தொகை என் இளைய மகனால் அவரது சொந்த வருமானத்தை கொண்டு வாங்கப்பட்டது என்றால் தவறு. என் மீது உள்ள அன்பு மற்றும் மரியாதை நிமித்தமாக வீடு என் பெயரில் கட்ட வேண்டும் என்பதற்காகத்தான் வா.சா.ஆ.1 என் பெயரில் ஏற்படுத்தப்பட்டு வங்கி கடனும் கூட்டாக என் பெயரில் பிரதிவாதியால் பெறப்பட்டது என்றால் தவறு. வீட்டை சுமார் ரூ.35,00,000/-த்தில் என் இளைய மகனால் கட்டப்பட்டது என்றால் என் மூத்த மகன் இளைய மகன் செந்தில்குமாருக்கு வெளிநாட்டிலிருந்து தொகையை அனுப்பி விட்டான்.

என் மூத்த மகன் வெளிநாட்டிலிருந்து வீடு கட்டுவதற்காக என் இளைய மகனுக்கு அனுப்பினார் என பொய்யாக சொல்கிறேன் என்றால் தவறு. 2016 ல் என் மூத்த மகன் வெளிநாடு செல்வதற்காக ரூ.5,00,000/- செலவான தொகையை என் இளைய மகன்தான் கொடுத்தார் என்றால் தவறு. ரூ.35,00,000/-க்கு மேல் வீட்டை கட்டி கடன் திரும்ப செலுத்திய பிறகு என் இளைய மகன்தான் எல்லாவற்றையும் செய்தான் என்ற காரணத்தினால் வா.சா.ஆ.5 ஏற்படுத்தப்பட்டது என்றால் தவறு. என் மூத்த மகன், அவரது மனைவி, அவரது மாமனார் ஆகியோரின் தூண்டுதலின் பேரில் வா.சா.ஆ.5 பொய்யாக ஏற்படுத்தப்பட்டதாக சொல்லி தற்போது வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் தவறு. என் இளைய மகனுக்கும் எனக்கும் தற்போது நடக்கும் பிரச்சனை என்னவென்றால் என்னை ஏமாற்றியதுதான். நானும் எனது கணவரும் புதிதாக கட்டிய வீட்டை எங்களது 2 மகன்களும் எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கூறியிருந்தோம். வழக்கு தாக்கல் செய்த பிறகு சமரச தீர்வு மையத்திற்கு வழக்கு அனுப்பப்பட்டது என்றால் ஆமாம். சமரச தீர்வு மையத்தில் நான் மூத்த மகனுக்கு ரூ.20,00,000/-யை கொடுத்துவிட்டு வீட்டை வைத்துக் கொள்ளுமாறும் அல்லது ரூ.20,00,000/- யை கொடுத்துவிட்டு வீட்டை விட்டு கொடுக்குமாறும் கூறினோம். அந்த உடன்படிக்கைக்கு என் இளைய மகன் ஒத்துக்

கொள்ளவில்லை. இளைய மகன் என்னை ஏமாற்றவில்லை எனவும் நான் அவன் என்னை ஏமாற்றியதாக வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் எனவும் சொன்னால் தவறு. வா.சா.ஆ.5 என்னால் முழு மனதுடன் அதை தெரிந்துகொண்டு என்னால் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது எனவும் அதை ரத்து செய்ய கோரும் பரிகாரம் கிடைக்கத் தக்கதல்ல எனவும் சொன்னால் தவறு. உண்மை நிலவரத்தை தெரிந்து கொள்ளும் அளவிற்கு போதுமான படிப்பறிவு எனக்கு உள்ளது என்றால் தவறு.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.09.09 15:48:16 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,

திருவாரூர்.